செ.வெ.எண்: 238 நாள்: 21.3.2020

**புதுக்கோட்டை மாவட்டத்தில் வாட்ஸ்அப்பில் கொரோனா குறித்து அவதூறு பரப்பிய 3 பேர் சிறையிலடைப்பு.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் வாட்ஸ்அப்பில் கொரோனா குறித்து அவதூறு பரப்பிய 3 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளாக தமிழக அரசின் அறிவுறுத்தலின் படி பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு அரசின் அறிவுரைகளை பொதுமக்கள் தவறாது பின்பற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் கொரோனா வைரஸ் குறித்து தவறான அவதூறான தகவல்களை வாட்ஸ்அப், பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் யாரும் பகிர கூடாது என எச்சரிக்கை செய்து, அறிவுறுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்றையதினம் வாட்ஸ்அப்பில் கொரோனா தொற்று உள்ளதாக அவதூறு செய்தியை பரப்பிய புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை பகுதியை சேர்ந்த 26 வயதுடைய ஐயப்பன் என்பவரும், 21 வயதுடைய ராஜ்குமார் என்பவரும்,

அதேபோன்று அறந்தாங்கி பகுதியை சேர்ந்த 32 வயதுடைய பழனிவேல் ஆகியோரின் மீது வழக்குப்பதிவு செய்து உடனடியாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், வாட்ஸ்அப், பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் அவதூறு பரப்புவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் வகையில் தனிக்குழு அமைக்கப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. எனவே பொதுமக்களுக்கு தேவையற்ற பீதியை ஏற்படுத்தும் வகையில் கொரோனா பரவுவதாக அவதூறான தகவல்களை பதிவிடுதல் மற்றும் பகிர்தலை தவிர்க்க வேண்டும்.

கொரோனா வைரஸ் தடுக்கும் வகையில் தமிழக அரசு மேற்கொண்டு வரும் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கும் பொதுமக்கள் தொடர்ந்து முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**